முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1484

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரம ஆனந்த ஞான சொரூபனே
சீர்திருத்தம் செய்து இந்த கலியுகத்தை
சித்திமிகு ஞான யுகமாக மாற்ற
2. மாற்றவே மாதவராஜனாய் அவதரித்த
மகானே ஆறுமுகப்பெருமான் என் அவதாரமே
வகைபட உன் பெருமை கூறி
வழங்குவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 ம் நாள், 22.10.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. ஆசியதும் அரங்கனால் உலகமாற்றம்
அறிவிப்பேன் தொண்டர்கள் படைகொண்டு அரங்கேறும்
ஆசியதும் அரங்கன் தர்மத்தால்
அகிலமே பசிபிணி வறுமை நீங்கி
4. நீங்கியே பலமிக்க பூமியாக
நிலவுலகமெங்கும் அரங்கன் சன்மார்க்கத்தால்
ஆற்றல்பட ஞான பூமியாக
அமைதிபாதுகாப்பு நிறைந்த நல்லுலகமாக
5. ஆகவே மாற்றம் கண்டு அற்புதம் காணும்
அகிலமெங்கும் தர்மசாலைகள் உருவாகி
வருங்காலங்களில் அரங்கன் தர்மம்
வாய்மை நிறைந்த நல்லோர்கள் துணைபட
6. துணைபட எங்கும் தர்மஞான ஆட்சி
துணைபட எங்கும் தர்மபலம் நிரம்பி
பேருலகமெல்லாம் அரங்கன் புகழ் பரவும்
புண்ணியவான் அரங்கன் என்கின்ற நற்பேரோடு

7. நற்பேரோடு உலகமெல்லாம் தொண்டர்படை உருவாகி
ஞானவான்கள் நிறைந்த வரும்காலம் தேர்தல்களம் காணும்
ஞானபூமியாக ஞான ஆட்சியாக
நம்பகமுற மக்களை வழிநடத்தும் நல்லாட்சியாக உலகமாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–